அஞ்சல் வழி வேதாகமப் பாடம்

# சமாதான செய்தி

## The Message of Reconciliation

**மூன்றாம் பாகம்**

Mor Book - 3

Tamil Translation

கிறிஸ்து பரலோகத்துக்கு

சென்ற பிறகு நடந்த

காலம்

பாடங்கள் : 21-30

குறிப்பு எண் :

**S.M.விநய் குமார்**

## நமக்கு கொடுக்கப்பட்ட வாய்ப்பு

பாடம் - 21

கிறிஸ்து தன்னுடைய சபையை ஸ்தாபித்தபோது, அப்போஸ்தலருடைய நடபடிகள் 2-ம் அதிகாரத்தில் குறிப்பிட்டபடி, **இரட்சிப்படைய நாங்கள் என்ன செய்யவேண்டும்?** என்ற கேள்வியை யூதர்கள் பேதுருவை நோக்கி கேட்டார்கள். அதை முழுமையாக படித்தோமானால் அதனுடைய முழுமையான உள் உணர்வை நாம் புரிந்துக் கொள்ள முடியும், அதிலிருந்து நமக்கு புத்துணர்வு கிடைக்கும்.

பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்தில் வந்திருந்தார்கள். அ ப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழுக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று (வ.1-2) அந்த சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடிவந்து, (வ-6)... அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங் கூட நின்று, அவர்களை நோக்கி, உரத்த சத்தமாய்: (வ-14)... யூதர்களே, எருசலேமில் வசம் பண்ணுகிற ஜனங்களே நீங்களெல்லாரும் அறிந்து கொள்வீர்களாக, தேவன் நாசரேயனாகிய இயேசுவின் மூலமாக அற்புதங்களையும், பலத்த செய்கைகளையும், அடையாளங்களையும் உங்களிடத்தில் செய்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். இது நீங்கள் நன்கு அறிவீர்கள். தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படிலேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் அணியடித்துக் கொலை செய்தீர்கள்.

அவரை மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக்கூடாதிருந்ததினாலே தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார் : (வ-22-24)... நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் திச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான். இதை அவர்கள் கேட்டபொழுது இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து, சகோதரரே நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனத்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்ததத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி, (வ-36-39). அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். (வ-41). .........அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். அப்பொழுது எல்லாருக்கும் பயமுண்டாயிற்று, அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும், செய்யப்பட்டது. (வ-42-43). நாம் எல்லோருக்கும் இப்படிப்பட்ட வாய்ப்பு இருக்கின்றது. இப்படிப்பட்ட வாய்ப்பு பெற்றுக் கொடுத்த கிறிஸ்துவினுடைய **சமாதான நற்செய்தியை** நாம் ஏற்றுக்கொள்கிறோமா அல்லது புறக்கணித்துவிடுகிறோமா, அந்த வேலையிலே சிலர் அந்த நற்செய்தியை புறக்கணித்தார்கள், இருந்தாலும் 3000 பேர் அதை ஏற்றுக்கொண்டார்கள், வசனத்தை ஏற்றுக் கொண்டவர்கள் இப்படிச் செய்தார்கள்.

அவர்கள் சுவிசேஷத்தை கேட்டார்கள். அது என்னவென்றால் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார். மரித்து சமாதி பண்ணப்பட்டார், உயிர்த்தெழுந்தார். பிறகு பிதாவினிடத்திற்கு ஏரிச் சென்றார்.

- அவர்கள் இருதயத்திலே குத்தப்பட்டார்கள்.

- நாங்கள் என்ன செய்யவேண்டும்? என்று சொன்னார்கள்.

- சுவிசேஷ நற்செய்தியை ஏற்றுக்கொண்டார்கள்.

a. மனத்திரும்பினார்கள்

b. அவர்கள் பாவ மன்னிப்புக்கென்று இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் (முழுக்கு) பெற்றார்கள்)

பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்.

3000 பேர் இயேசுவின் சீஷர்களோடகூட கணக்கிலே சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

அவர்கள் இவைகளில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.

1. அப்போஸ்தலருடைய உபதேசத்திலும்
2. அந்நியோந்நியத்திலும்
3. அப்பம் பிட்குதலிலும்
4. ஜெபம் பண்ணுதலிலும்
5. காணிக்கைக்கொடுப்பதிலும்

கேட்டவர்கள் எல்லாரும் ஒரு தீர்மானம் எடுத்தார்கள் என்பதை நாம் இங்கே கவனிக்கலாம். அந்த முடிவு அது என்னவென்றால் சமாதான சுவிசேஷ நற்செய்திக்கு கீழ்ப்படிந்தார்கள் என்றும் அல்லது புறக்கணித்தார்கள் என்பதை இவைகளிலே ஏதோ ஒன்று இருக்கும். இந்த சமாதான சுவிசேஷத்தை கேட்பதற்கு நமக்கு அநேக வழிகள் உண்டு. சிலர் ஆர்வமுள்ளவர்களாக வேதாகமத்தை படிப்பதின் மூலமாகவும் அல்லது மற்றொருவரிடம் இருந்து அவர்கள் உதவியால் வேத வாக்கியங்களை ஆராய்நது பார்ப்பதின் மூலமாகவும் அல்லது இண்டர்நெட், புத்தகம் துண்டுப்பிரசுரம், வேத வகுப்பு செல்வதின் மூலமாகவும் சுவிசேஷ நற்செய்தியை தெரிந்துக் கொள்ளலாம். கிறிஸ்து சுவிசேஷ நற்செய்தியை கேட்டவர்கள் அல்லது சீஷர்களாக நடக்கிறவர்கள், இரட்சிப்பு பெறும்படியான விசுவாசம் அவர்களில் ஏற்பட்டபொழுது அவர்கள் தண்ணீர் மூழ்குதல் ஞானஸ்நானம் பெற்ற அவர்கள் தேவன் அவர்களுடைய பாவங்களை மன்னிக்கும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்தது.

கேள்விகள் :

1. சமாதான நற்செய்தி என்றால் என்ன?

................ கிறிஸ்துவின் மரணம் ............கிறிஸ்துவின் அடக்கம்

............கிறிஸ்து உயிர்தெழுதல் ............கிறிஸ்து மறுபடியும் பரலோகத்திற்கு செல்வது

............மேலேக் கொடுக்கப்பட்டவைகள் ............அவைகள் எதுவும் இல்லை

2. கேட்டவர்கள் என்ன செய்தார்கள்?

............நற்செய்திக்குக் கீழ்ப்படிந்தார்கள்

............நற்செய்தியைப் புறக்கணித்தார்கள்

............ஏதோ ஒரு முடிவு எடுத்தார்கள்.

3. யார் நற்செய்திக்கு கீழ்ப்படிந்தவர்கள்?

............மனம் திரும்பினவர்கள் ............ஞானஸ்நானம் பெற்றவர்கள்

............பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றவர்கள் ............மேலே குறிப்பிட்ட எல்லாம்

4. கீழ்ப்படிந்த எல்லோரும் இவைகளை உறுதியாய்த் தரித்திருந்தார்கள்

............இயேசுவின் உபதேசத்தை அதிகமாய் கற்றுக்கொண்டார்கள்.

............அவர்களுடைய பழைய வேலைகள், நண்பர்களோ கூட சேர்ந்திருந்தார்கள்.

............கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களிடம் ஒற்றுமையுடன் அப்பம் பிட்டார்கள்.

............மேலே குறிப்பிட்டவைகள்

............A & C

............B & C

5. சுவிசேஷ நற்செய்தி எல்லோருக்கும் கிடைக்க வாய்ப்பு இருக்கின்றதா?

............ஆம் ............இல்லை

# ஒரு புதுச்சிருஷ்டி

பாடம் - 22

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின... 2 கொரி 5 : 17

மரணம் – பழைய மனிதனின் பாவ எண்ணங்கள் (மாமிசம் அல்லது பூமிக்கூரிய மனிதன்)

அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும்
இச்சைகளாலே கெட்டுக்போகிற பழைய மனுஷனை
நீங்கள் களைந்து போட்டு..... எபேசியர் 4: 2

அறியப்படாதவர்களென்னப்பட்டாலும், நன்றாய் அறியப்பட்டவர்களாகவும், சாகிறவர்கள் என்னப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர்களாகவும், தண்டிக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் கொல்லப்படாதவர்களாகவும்; துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும்

சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவர்யவான்களாக்கு கிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப் பட்டாலும் சகலத்தையுமுடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம். கொரிந்தியரே, எங்கள் வாய் உங்களோடே பேசத்திறந்திருக்கிறது. எங்கள் இருதயம் பூரித்திருக்கிறது. (2. கொரி 6:9-10)

ஏனெனில் நாம் கூட முன்னே ஞானமில்லாவர்களாகவும், கீழ்ப்படியாதவர்களாகவும், மோசம் போனவர்களாகவும், அநேக விதமான இச்சைகளாலுக்கும் அடிமைப்பட்டவர்களாய் இருந்து அசுத்தமுள்ளவர்களாகவும் இருந்தோம். நாம் இதற்கு முன்னே புறஜாதியாராயிருந்து, ஒருவரையொருவர் புறங்கூறிக்கொண்டு, தேவனுக்கு தூரமுள்ளவர்களாய் இருந்தோம். பாவிகளாய் மாம்சத்தின் கிரியைகளுடையவர்களாய் இருந்தோம்.

அவைகள்..... விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினர்கள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள்களியாட்டுகள் முதலானவைகளே, இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன். (கலா 5:19-21). அதினாலே நாம் அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களையிருந்த நம்மை கிறிஸ்துவோடகூட உயிர்ப்பித்தார்.

## அடக்கம் (பாவ மாமிசத்திற்கு)

இப்படிப்பட்ட பாவ மனிதனை அடக்கம் பண்ணி ஒரு புது மனிதனாக நம்மை மாற்ற வேண்டிதாயிருக்கிறது. ஒரு விதை பூமியிலே விதைத்த பிறகு அதிநுல்லிருந்து ஒரு துளிர் எப்படி புதிதாக முழைக்குமோ - அதுபோல பாவம் நிறைந்த மனிதன் வசனத்தை ஏற்றுக் கொண்டு, கிறிஸ்துவின் மரணத்திலே ஞானஸ்நானம் மூலமாக அடக்கம் பண்ணப்பட்டு பிறகு அதிநுல்லிலிருந்து ஒரு புது ஆவியையும் மனிதன் ஒரு புதிய ஜீவனையும் பெற்று பிறக்கின்றான். எப்படியென்றால் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பம்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். (ரோமர் 6:3-4)

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தாள் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான். (2.கொரி 5:17)

கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை, புது சிருஷ்டியே காரியம் (கலா.6-15)

### உயிர்த்தெழுதல் (ஒரு புதுச்சிருஷ்டி என்றால் ஆவிக்குரிய மனிதன்)

நீங்கள் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஏ.வு. ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால்

உண்டானதல்ல. ஏனெனில் நற்கிரியைகளைச் செய்கிறதற்குக் நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம், அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார். (எபேசியர் 2:8-10)

அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து போட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள். (எபே. 4:22-24)

தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே.

பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள். அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றுயிருப்பீர்கள். மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. (காலத்தியர் 5:16-17) (கொலோ : 3:17) (கலாத்தியர் : 5:22-26)

தினசரி வாழ்க்கை

நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்கும் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய் அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி சமாதானக்காட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள் (எபே.4:1-3)

ஆதலால், கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது. என்னவெனில், மற்றப் புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறது போல நீங்கள் இனி நடவாமலிருங்கள். அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியாராயிருந்து உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும், ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள். (எபே. 4:17-19)

புது சுருஷ்டியாக தினசரி வாழும்படிக்கும் எபே.4-5. பிறகு 6ஆம் அதிகாரங்களிலே தெரியப்படுத்துகிற வசனங்கள் கவனியுங்கள்.

உன்னுடைய மனதின் கிரியைகளினாலே ஒரு புது நாட்கள் வாழ்க்கையைப்பெற்று வாழு

மாம்சத்தின் கிரியையாகிய பழைய மனதை விட்டு நீ பிறரிடத்திலும் உண்மையானவைகளை பேசுங்கள்.

நீங்கள் கோபத்தினால் பாவம் செய்யாதிருங்கள்

சூரியன் மறைவதற்குள்ளே உங்கள் கோபம் நிலைக்கக்கூடாது.

திருடாதிருங்கள். வேளை செய்யுங்கள்.

உங்கள் வாயிலிருந்து வீணான வார்த்தைகளை வரவிடாதிங்கள்.

பகைகள், புறக்கணித்தல், சண்டைகள், பொறாமைக்ள, மற்றும் எல்லாவிதமான தீங்கு காரியங்களுக்குத் தூரமாய் இருங்கள்.

தயவு மற்றும் நற்குணம் பெற்றிடுங்கள்.

கிறிஸ்து நம்மை மன்னித்ததுபோல, நாம் ஒருவரையொருவர் மன்னிப்போம்.

அன்பாய் வாழுங்கள்.

உங்களிலே இப்படிப்பட்டவைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள். காமவிகாரம், அநீதி, அந்நியாயங்கள், பேராசை, கெட்ட பழக்கவழக்கங்கள், மூர்க்கமுள்ள பேராசை, களியாட்டுகள், கேளி கிண்டல்.

நியாயமில்லாமை, அநியாயம், பேராசைப் பிடித்தவர்களுக்கு தேவனுடைய இராஜ்ஜியத்திலே இடம் இல்லை.

மதுபான பிரியர்களாய் இருக்க கூடாது.

ஆவியைப் பெற்றவர்களாய் இருங்கள்.

ஒருவரையொருவர் சங்கீதங்களினாலும், பாடல்கள் மற்றும் ஞானப்பாட்டுகளினாலும் புத்திசொல்லிக் கொள்ளுங்கள்.

உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடித் துதிக் கொண்டிருங்கள்.

எப்போழுதும் பிதாவுக்கு நன்றி சொல்லுங்கள்.

கிறிஸ்துவைப்போல ஒருவரையொருவர் தேற்றுங்கள்.

மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள்.

புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள், அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து, கிறிஸ்து கூட சபையை அன்பு கூர்ந்து, அதற்காக தன்னைத்தான் ஒப்புக்கொடுத்தார்.

பிள்ளைகளே உங்கள் பெற்றிருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள்.

உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக

பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல்

வேலைக்காரரே, நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுப் போல சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு பயத்தோடும் நடுக்கத்தோடும் கீழ்ப்படிந்திருங்கள்.

எஜமானன்களே, அப்படியே நீங்களும் உங்களுக்கும் எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறார்ரென்றும் அவரிடத்தில் பட்சபாதம் இல்லையென்றும் அறிந்து கடுஞ்சொல்லை விட்டுவிடுங்கள் இப்படி அவர்களிடம் நடந்துகொள்ளுங்கள். (தீத்து 3:1-2)

அதிபதிகளுக்கும் அதிகாரமுள்ளவர்களுக்கும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும், எல்லா நற்க்கிரியைச் செய்ய எப்பொழுதும் தயாராக இருங்கள், மனிதர்கள் எல்லாரிடத்திலும் பூரணமான சாந்தமள்ளவர்களாய் இருங்கள். யாரையும் கடிந்துக்கொள்ளாமல், சண்டை போடாதவர்களும், சாந்தமுள்ளவர்களாய் இருக்கும்படிக்கும் அவர்களுக்கு நினைவுபடுங்கள்.

## கேள்விகள் :

1. கிறிஸ்துவினிடத்தில் வந்த ஒருவன் புது சுருஷ்டியாக மாறுகிறான் எதற்காக என்றால்?

................ தேவன் அதிசையவிதமாக ஒருவனுடைய வாழ்க்கையை மாற்றுகின்றார்.

................ மனிதன் தன்னைத்தான் ஒரு நல்ல மனிதனாக மாறுகின்றான்.

................ ஞானஸ்தானத்தின் மூலமாக பாவங்களைக் கழிவிடக் கொள்கின்றான்.

2. தேவனுடைய கிருபையினாலே, கிறிஸ்து பாவத்திற்கு சம்பூரணபலி, எல்லாருக்கும் இலவசமாக கொடுத்தார். இருந்தாலும் அதை ஏற்றுக் கொள்வதற்கும், ஏற்றுக் கொள்ளாமல் போவதற்கும் தானாகவே தன்னுடைய நம்பிக்கையின் மேல் சார்ந்திருக்கின்றது.

...............ஆம் ................ இல்லை

3. ஒருவன் சத்தியமுள்ளதை, பரிபூர்ணமுள்ளதை மற்றும் நியாயமானவைகளை இழந்து போவதற்கு எளிதான வழிகள் உண்டு?

................. ஆம் ........... இல்லை

4. ஒரு புது, கிறிஸ்துவன், பாவத்திலே மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மற்றும் புது ஜீவனை பெற்றும் புது சுருஷ்டியாக மாறியும் பிறகு கூட முன்னே வாழ்ந்ததுப் போல வாழமுடியும்.

...............ஆம் ...........இல்லை

5. அவர்களிடம்?

...............ஆம் ................இல்லை

## கிறிஸ்துவுக்குள் இருக்கின்றதினாலே கிடைக்கின்ற நன்மைகள்

பாடம் - 23

தேவனிடம் எதிர்த்து நிற்கின்ற நிலைமையிலிருந்து உபத்திரவத்திலே நீதிமான்களாக மாறுகின்ற நிலைமை வரைக்கும் நம்மை மாற்றுவதற்கு தேவையானவைகளை முன் பாடத்திலே பார்த்தோம். கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலின் சுவிசேஷத்தை நாம் நம்பவேண்டும்.

அவருக்குள் இருப்பதற்கு, அவரினுள் அல்லது அவர் மூலமாக நாம் விடுதலை பெற்று கர்த்தரிடம் ஒப்புரவாக்கப்படுவதற்கு அந்த சுவிசேஷ நற்செய்திக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும்.

தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துக் கொண்டபடியே, பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார். அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. அந்த கிருபையை அவர் சகல ஞானத்தோடும் புத்தியோடும் எங்களிடத்தில் பெருக பண்ணினார். காலங்கள் நிறைவேறும் போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று, தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார். (எ.பே.1:4-10) அதினாலே கிறிஸ்துவின் மூலமாய் நாம் தேவனிடத்தில் ஒப்புரவாயிருக்கின்றோம்.

கிறிஸ்தவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது. ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும், பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம். ஆகையால், இது முதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறிவோம். நாங்கள் கிறிஸ்துவையும், மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒரு போதும் அவரை மாம்சத்தின்படி அறியோம். இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின, இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது. அவர் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நம்மை தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக் கொடுத்தார் அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஓயுரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார் (2.செனி 5 : 14-19)

ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை கிருபை பெறுகும்படியே பாவத்திலே நிலை நிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? கிறிஸ்துவ இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் எண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப் பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவ சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று, அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையடையப்பட்டிருக்கிறானே. (ரோமர் 6:1-7)

அவரைப் பின்பற்றாமல் மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல. ஏனென்றால் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. மேலும் சகல துரைத்தளங்களுக்கும் அதிகாரத்துக்கும்,

தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமள்ளவர்களாயிருக்கிறீர்கள் அல்லாமலும் நீங்கள் கிறிஸ்துவைப் பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவ சரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள். ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும் அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள் (கொலா 2:8-12)

நாம் எல்லோரும் கிறிஸ்துவின்மூலமாக தேவனுக்கு ஒப்புரவாய் யிருக்கின்றோம் என்றால் தேவனுக்கு மன்பாக நிற்கும்போது, இயேசு நியாயதிபதியாக நமக்காக பரிந்து பேசுகிறவாய் இருக்கின்றார்.

## கேள்விகள் :

1. ஒருவன் தன் பழைய மனித எண்ணங்களை கிறிஸ்துவேடே கூட சிலுவையில் அடித்து, தன்னுடைய பாவத்தின் விளைவாக கிறிஸ்துவுடனே கூட இணைந்து நித்திய ஜீவனை வாக்குத்தத்தமாக பெற்று. அவருடைய உயிர்த்தெழுதலிலே இணைந்து இருக்கின்றாள்?

..................ஆம் .........இல்லை

2. விடுதலை எங்கே கண்டடைய முடியும்?

.............. கிறிஸ்துவுக்குள் விசுவாசத்தின்மூலமாக மட்டும்
.............சுதந்திரத்திற்காக ஜெபம் செய்வது
.............கிறிஸ்துவின் இரத்ததின்மூலம்

3. நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றதினால் என்ன நன்மை?

.......... பாவ மன்னிப்புக் கிடைக்கும்
.......... நித்திய ஜீவனைப் பெறமுடியும்
.......... ஆசீர்வாதங்கள் பெறமுடியும்
.......... மேலே கொடுக்கப்பட்டவைகள் எல்லாம்.

4. பாவத்தில் மரித்து, ஞானஸ்தானத்தின் மூலமாக அடக்கம் பண்ணப்பட்டு மற்றும் புது ஜீவனை பெறுவதற்கு எழுப்பப்பட்டவர்கள் கிறிஸ்துவோடேகூட ஐக்கியமாய்யிருக்கிறார்கள்.

...............ஆம் ...............இல்லை

5. எல்லா பரிப்பூர்ணம் எங்கே இருக்கின்றன?

............... கிறிஸ்து ................அப்போஸ்தலர்கள்

# கோரிக்கை மூலமாக விழுங்கப்படுவது

பாடம் 24

விசுவாசிக்கின்றவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. என்று பவுல் ரோமாபுரியாருக்கு எழுதின நிரூபத்தில் குறிப்பிடுகிறார். தேவனுடைய வசனங்களைக் கேட்டு,

அதை புரிந்துக் கொள்வதும், அல்லது விசுவாசம் கேள்வினாலே வரும் (ரோமர் 10:17). நாம் தேவனுடைய வசனத்துக்குக் கீழ்ப்படிந்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கும், அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம். (ரோமர் 6:2-4).

விதையைப் பற்றிய கதை இது. ஒரு விதை மிகப் பெரிதான மரமாக மாறுவதற்கு முதலில் அது நாட்டப்படவேண்டும். அதன் பிறகு கிளைகாம்பு முலைக்கும், மண்ணுக்குள் இருந்து முளைக்கப்பட வேண்டும் அப்பொழுது அது மகாபெரிதான மரமாக வளரும். அது மரமாக வளர்ந்தபிறகு, அநே கஷ்டங்கள், துன்பங்கள், எதிர்க்கொள்ளும். உதாரணத்திற்கு சூறாவளி காற்று, வெள்ளம், பஞ்சம், அக்னி, வியாதிகள், அடிகள், பறவைகள், மிருகங்கள், மற்றும் மனிதர்களிடமிருந்து இவற்றில் எல்லாவற்றிலிருந்து பாதுகாத்துக் கொண்டு, சிலவகை வளராமல் நின்று விடுகின்றன. சில மரங்கள் வளர்ந்து விழுந்துவிடலாம், உண்ணப்படலாம், சில வகை வளர்ச்சி இல்லாமல் மலராமல் போகலாம் சிலவகை மரித்துவிடலாம் மரத்தைப் போலவே, கிறிஸ்துவர்களுக்கு கூட வருத்தமான சம்பவங்கள் நடக்கலாம். இவைகள் மூலமாககூட வளராமல் கீழே விடலாம். மிதிக்கப்படலாம். மலராமல்கூட போகலாம், மற்றும் கீழே கொடுக்கப்பட்ட வசனங்களிலே சொன்னதுபோல மரணமடைந்து போக முடியும்.

தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள், ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கொச்சிக்கிற சிங்கம்போல், எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிரந்தது, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள், உலகத்திலுள்ள உங்கள் சகோதரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவராக,

முன்னே அந்நியாராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும், கண்டிக்கப்படாதவர்களாகயும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைத்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார். நீங் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையைவிட்டு அசையாமல், ஸ்திரமாயும், உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால், அப்படியாகும். அந்த சுவிசேஷம் வானத்தில் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டுவருகிறது. அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக்காரனானேன். (கொலோ 1:21-23).

லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு, எச்சரிக்கையாயிருங்கள். அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல. (கொலோ 2:8)

கணுக்களாலும் கட்டுகளாலும் உதவிபெற்று இணைக்கப்பட்டு, தேவ வளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீர முழுவதையும் ஆதரிக்கிற தலையைப் பற்றிக் கொள்ளலாம், மாயமான தாழ்மையிலும், தேவ தூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று, காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து, தன் மர்மச்சிந்தையினாலே வீணாய் இறுமாப்புக் கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப் பொருள்

நீங்கள் இழந்துபோகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப்பாருங்கள். (கொலோ 2:18-19)

அந்தச் சுவிசேஷம் உலகமெங்கும் பரம்பிப்பலன் தருகிறதுபோல, உங்களிடத்திலும் வந்து, நீங்கள் அதைக்கேட்டு, தேவகிருபையைச் சத்தியத்தின்படி அறிந்து கொண்ட நாள் முதல், அது உங்களுக்குள்ளும் பலன் தருகிறதாயிருக்கிறது.

உண்மையான ஊழியக்காரனுமாயிருக்கிற எப்பாப்பிராயவினிடத்தில் நீங்கள் கற்றறிந்திருக்கிறீர்கள் (கொலோ 1:6-7)

இந்த நல்மனச்சாட்சியைச் சிலர் தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள். இமெனேயும், அலெக்சந்தரும் அப்படிப்பட்டவர்கள். அவர்கள் தூஷியாதபடி சிட்சிக்கப்பட. அவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தேன். (1 தீமோ 1:19-20).

1 . ஆகிலும் ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டுவிலகிப் போவார்கள்.

2. விவாகம் பண்ணாதிருக்கவும், 3. விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோட அநுபவிக்கும்படி தேவன் படைத்த போஜனபதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள். (1. தீமோ 4:1-3)

பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து; விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள். (1 தீமோ 6:10)

ஓதீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக் கொண்டு, சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு, சிலர் அதைப் பாராட்டி, விசுவாசத்தைவிட்டு வழிவிப்போனார்கள் கிருபையானது உன்னோடேகூட இருப்பதாக ஆமென். (1 தீமோ 6:20-21)

சீர்கேடான வீண் பேச்சுகளுக்கு விலகியிரு; அவைகளால் (கள்ளப் போதர்களான) அவர்கள் அதிக அவபக்தியுள்ளவர்களாவார்கள்; அவர்களுடைய வார்த்தை அரிபிளவையைப் போலப் படரும், இமெநேயும் பிலேத்தும் அப்படிப்பட்டவர்கள் (2. தீமோ. 2:16-18)

ஏனென்றால், தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து என்னைவிட்டுப் பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான்; கிரெஸ்கே கலாத்தியா நாட்டிற்கும், தீத்துதல்மாத்தியா நாட்டிற்கும் மோய்விட்டின் (2. தீமோ 4:10)

அநேகர், விசேஷமாய் விருத்த சேதனமுள்ளவர்கள்; அடங்காதவர்களும், வீண் பேச்சுக்காரரும், மனதை மயக்குகிறவர்களுக்கிறார்கள், அவர்களுடைய வாயை அடக்கவேண்டும், அவர்கள் இழிவான ஆதாயத் துக்காகத் தகாதவைகளை உபதேசித்து, முழுக் குடும்பங்களையும் கவிழ்த்துப் போடுகிறார்கள். (தீத்து 1:10-11)

உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன. (கலா 1:6)

கிறிஸ்துவுக்குள் நீதிமான்களாக்கப்படும்படி நாடுகிற நாமும் பாவிகளாகக் காணப்படுவோமானால், கிறிஸ்து பாவத்திற்குக் காரணரோ? அல்லவே. (கலா.2:17) நான் உங்களுக்காகப் பிரயாசப்பட்டது வீணாய்ப்போயிற்றோ என்று உங்களைக்குறித்துப் பயந்திருக்கிறேன் (கலா. 4:10-11)

நீங்கள் நன்றாய் ஓடினீர்களே, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போக உங்களுக்குத் தடை செய்தவன் யார்? (கலா. 5:7) என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? (யாக் 2:14) அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருநதால் தன்னிலே தானே செத்ததாயிருக்கும். (யாக் 2:17) ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. (2 பேதுரு 1:10)

கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப் போதகர்கள் இருப்பார்கள் அவர்கள் கேட்டுக் கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்ளுவார்கள். (2 பேதுரு 2:1)

ஆதலால் பிரியானவர்களே, இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறபடியால், அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி வழுந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து, (2 பேதுரு 3:17)

இயேசு கிறிஸ்துவினுடைய ஊழியக்காரனும், யாக்கோபினுடைய சகோதரனுமாயிருக்கிற யூதா, பிதாவாகிய தேவனாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களும், இயேசு கிறிஸ்துவினாலே காக்கப்பட்டவர்களுமாகிய அழைக்கப்பட்டவர்களுக்கு எழுதுகிறதாவது : (யூதா 1:2)

நீங்கள் முன்னமே அறிந்திருந்தாலும், நான் உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறதென்னவெனில், கர்த்தர் தமது ஜனத்தை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி இரட்சிப்பு, பின்பு விசுவாசியாதவர்களை அழித்தார் - தங்களுடைய ஆதி மேன்மையைக் காத்துக் கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத் தீர்ப்புக் கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார். அப்படியே சோதோம் கொமோரா பட்டணத்தார்களும், அவைகளைப் போல் விபசாரம் பண்ணி, அந்நிய மரம் சந்தைத் தொடர்ந்து, நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து, திருஷ்டாத்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். (யூதா 5-7).

## கேள்விகள் :

1. கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களாக மற்றும் பிழையற்றவர்களாக இருந்து விசுவாசத்தில் முன் செல்லாவிட்டால் அவர்கள் இவ்விதத்திலும் பரிசுத்தவான்களாகவும் பிழையற்றவர்களாகவும் அவருக்கு முன்பாக நிற்கமுடியாது என்று பவுன் ஆனவர் குலசியருக்கு எழுதியுள்ளார்.

   ............. ஆம் ............இல்லை

2. சிஷன்னாகிய தேமா, பவுள்ளுடைய உடன் வழியக்காரர், பவுலைவிட்டு உலகத்திலே திரும்பிச் சென்றார்.

   .......ஆம் ...........இல்லை

3. அவர்களுடைய இரட்சிப்பு காப்பிற்றி கொள்ளுவதற்கு அவர்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் பேதுரு கிறிஸ்தவர்களுக்கு எச்சரிக்கை கொடுத்தார்.

................ஆம் ............இல்லை

4. தேவ தூதர்கள்கூட தனிச்சையாக வைத்து நியாயத்திர்ப்பு நாள் வரைக்கும் அந்த காரத்திலே வைத்தார்.

..............ஆம் ...........இல்லை

5. பணத்தின் மோப், ஆசைனவத்தின் மூலமாக சிலர் விசுவாசத்திலிருந்து போய்விட்டார்கள்.

..............ஆம் ............இல்லை

## ஆவிக்குரிய வஸ்திரம் உடுத்துவது

பாடம் - 25

சுவிசேஷத்தை கேட்டு, இயேசு தேவனுடைய குமாரன் என்று விசுவாசத்தவர்கள் தண்ணீரினுள் முழுக்க மூலமாக ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவுடன் கூட அடக்கம் பண்ணபட்டு பாவங்களுக்காக பரிப்பூர்ணபலியான கிறிஸ்து சரீரத்தின்மூலமாக என்றால் அவர் சாதபிக்கப்பட்ட சபையிலே சேர்க்கப்பட்டார்கள். இயேசு கிறிஸ்துவுக்குள் நீங்கள் எல்லோரும் விசுவாசத்தின் மூலமாக தேவனுடைய குமாரர்களாய் இருக்கிறார்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நீங்கள் எல்லோரும் கிறிஸ்துவை தரித்து கொண்டிருக்கிறீர்கள் (கிலா 3:26-27).

நாம் அவரைப்போல மாறுவதற்கு மிகவும் அவசியமாய் இருக்கிறது.

பரிசுத்த ஆவினுடைய ஏவுதலின்மூலமாக அப்போஸ்தலர்களைக் கொண்டு எழுதப்பட்ட வசனங்களை வேதத்தில் நாம் படித்து, புரிந்துக் கொண்டு கற்றுக் கொள்ளவேண்டும். நாம் இப்பொழுது சபையாக, அல்லது பரிசுத்தவன்களாக மாற்றப்பட்டு, அல்லது பாவத்திலிருந்து, கீழ்ப்படிதலுக்கு அழைக்கப்பட்டவர்களாய் அல்லது. உண்மையாக அவருடைய சரீரமாய் அழைக்கப்படுகிறோம். அது நாம் உடுத்திக் கொண்டிருக்கிற ஆவிக்குரிய உடைகள்ள பற்றி அல்லது, பெற்றிருக்கிற (இவ்வுலகத்திற்கேற்றபடி உடை அல்ல என்று புரிந்துக்கொள்ளமுடியும்) விஷயங்களை வைத்து உலகம் நம்மை அவருடைய சீஷர்களாக நோக்கி பார்ப்பார்கள்.

யூதர்களுடைய அதிகாரிகள் இயேசுவை இப்படிக் கேள்வி கேட்டார்கள். போதகரே நியாயப் பிரமாணத்தில் முதலாவதாக கற்பனை என்ன என்று கேட்டார்கள். அதற்கு அவர் உன் தேவனுடைய கர்த்தரை உன் முழு இருயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் உன் தேவனாகிய கர்த்தரை அன்புக் கூர்வாயாக என்பதே. இது முக்கியமானதும் முதலாவுதான கற்பனையாய் இருக்கின்றன. அப்படியே உன்னை நீ அன்பு கூறுவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே இவ்விரண்டு கற்பனைகளும் நியாயப்பிரமானம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார். (மத் 22:36-40)

இயேசு கூட ஒரு புது கட்டளையை பற்றி யோவான் 13:34-ல் இப்படிச் சொன்னார். நீங்கள் ஒருவரையொருவர் அன்பு கூறுங்கள் என்று புது கட்டயையைக் கொடுக்கிறேன். நான் உங்களை அன்பு

காட்டினது போல நீங்களும் ஒருவரைக்கொருவர் அன்பு கூர்வீர்களாக

மனிதர் மேல் அல்லாமல் தேவனை ஆதாரப்படுத்திக் கொண்டு அன்பிலே வாழ்ந்து, எப்பொழுதும் நற்கிரியைப் பண்ணி பார்த்துக் கொள்வீர்களாக அது அதிகாரத்தைவிட, பணத்தைக் காட்டிலும், பெரிய பெயர் காட்டிலும், ஊழியத்தின்மேல் ஆசையுள்ளவர்களாய் இருக்கவேண்டும். பவுல் (கொலோ 3:12-17) (படியுங்கள்) அதில் ஒரு நல்ல அட்டவணை கொடுக்கிறார்.

(கலா 5:22) டில் கூட இப்படிச் சொன்னார். ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம், இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமாக பிரமாணம் ஒன்றுமில்லை.

அந்தப்படி, முந்திய நடக்கைக்குரிய மோசம்போக்கும், இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களத்துப் போட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும், தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்.

(கலா - 5 : 19-21) இதில் நாம் செய்யக் கூடாதவைகள் மற்றும் அவைகளை ஏற்றுக் கொள்ளாதபடிக்கு சில விஷயங்களை பட்டியலிட்டு காட்டுகிறார்: மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன. அவையாவன : விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காவிகாரம், விக்கிரகாராதனை, பில்லி சூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள், முதலானவைகளே. இப்படிப்பட்டவைகளைச் செய்றெவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன.

கடைசியாக யோவான் வெளிப்படுத்தின விசேஷம் 21 : 8ல் அதைப் பற்றி இப்படி சொல்லுகின்றார். பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும் அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும் விக்கிரகாராதனைக்களும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்.

நாம் எதை புறக்கணிக்க வேண்டுமோ அல்லது எதை பற்றிக்கொண்டு இருக்க வேண்டுமோ இப்படி சொல்கிறார். அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால் பொய்யை களைத்து அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக் கடவன் நீங்கள் கோபங் கொண்டாலும் பாவஞ் செய்யாதிருங்கள். சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது. பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள். திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத் தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிராயாசப்படக்கடவேன். கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிரந்து புறப்படவேண்டாம், பக்தி விருத்திக்கு ஏதுவான நல்லவார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்கும் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள். அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப் படுத்தாதிருங்கள். (எபேசியர் 4:25-30)

அவருடைய நற்செய்தியை கேட்டு அதற்குக் கீழ்படிந்து தேவனுடைய ஒப்புறவு படித்திக்கொண்டு இருக்கின்றோமா அப்படி அவரை சந்தோஷப்படுத்த விஷயங்களை பெற்றிருந்தால் நாம் அவரை போல

மாறமுடியும்.

## கேள்விகள் :

1. இயேசு சொன்னதுபோல இரண்டு பெரிதான கட்டளை என்னவென்றால் தேவனை அன்புகூர்வது மற்றும் பிறரிடம் அன்பு கூர்வது.

........................ஆம் ........................இல்லை

2. சர்வ பரிபூரணத்தில் என்ன நிலைத்திருக்கின்றன?

.............. விசுவாசம் ............எதிர்ப்பார்ப்பு ..........அன்பு

3. ஆத்துமாவைக் கொண்டு நடத்தப்பட்டவர்கள் கிறிஸ்துவர்கள்

.................. கர்வமுள்ளவர்களாய் இருக்கமாட்டார்கள்.
.................. அவர்கள் யாரையும் துன்புறுத்தமாட்டார்கள்
.................. பொறாமைப்படமாட்டார்கள்.
.................. வெறியாய் இருக்கமாட்டார்கள்
.................. மேலே கொடுக்கப்பட்டவைகள் எல்லாம்.

4. சரீர சம்பந்தமான காரியங்களிலே நடந்தால் அவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டார்கள் கலாத்தியாருக்கு சொன்னதுபோல

........................ஆம் ........................இல்லை

5. சரீர சம்பந்தமான எண்ணங்களைவிட்டு, இனிமேல் திருடாதிருங்கள் என்று சாத்தானுடைய வார்த்தைகள் பேசவேண்டாம் என்றும் மற்றும் பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தாதிருங்கள் அப்போஸ்தலனாகிய பவுல் யாருக்கு தெரியப்படுத்துகிறார்?

................ கிறிஸ்துவர்களுக்கு ............. கிறிஸ்துவர்கள் அல்லாதவர்களுக்கு

# ஆவிக்கூரியவர்கள் செய்யும் பணிகள்

## பாடம் – 26

சமாதான நற்செய்தி-யிலிருந்து கேட்ட உபதேசங்களுக்கு கீழ்ப்படிந்த நாம் அனைவரும் கிறிஸ்துவை தரித்துக் கொண்டிருக்கின்றோம். மற்றும். ..............

1. பாவம் செய்வதற்க்கு மரித்தோம்
2. தண்ணீருக்குள் முழுக்கு (ஞானஸ்நானம்) பெற்றோம்
3. ஒரு புது ஜீவனை பெற்று மறுபடியும் எழுந்தோம்.
4. கிறிஸ்துவில் கிறிஸ்துவுக்குள், கிறிஸ்து சரீரத்தில் சேர்க்கப்பட்டோம்.

நமக்கு இவ்வுலக சரீரம், இருக்கிறதுபோல, கிறிஸ்துவின் மூலமாக கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய உடம்பு

இருக்கின்றது. சரீரம் வளர்ச்சியடைய எத்தனை காரியங்கள் செய்யவேண்டுமோ அது போல ஆவிக்குரிய உடம்புக்கு காரியங்கள் நடக்கவேண்டும். அப்பொழுது தனிப்பட்ட ஒவ்வொரு பாகங்கள் அதனுடைய வேலைகள் செய்யும்.

மனிதனுடைய சரீரம் தொற்றம்போல, கிறிஸ்து சீஷர்களாக நாமும் கூட ஆவிக்கூரிய சரீரமாக இருக்கிறோம், மற்றும் சரீரத்தின் பாகங்கள். எப்படி தேக வேளைகளை கொண்டிருக்கின்றனவோ நாம் கூட கிறிஸ்துவர்களாக அநேக வேலைகளை கொண்டிருக்கிறோம்.

ஒரு சரீரத்திலே நமக்கு அநேக பாகங்கள் இருக்கின்றனவோ, இந்த பாகங்கள் எல்லாவற்றிர்க்கு ஒரே வேலை எப்படியிருக்க இயலாதோ, அதுபோல அநேகராகிய நாம் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாக இருந்து, ஒருவருக்கொருவர் தனித்தனியே பாகங்களாயிருக்கின்றோம். நமக்கு இவ்வுலக சரீரம் இருக்கிறது போல கிறிஸ்துவின் சீஷர்களாக கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய கிரியைகள் இருக்கவேண்டும். சரீரம், உள்ளாசமாகவும் உட்சாகமாகவும், பலமாகவும் இருப்பதற்கு அநேக பணிகள் நடக்க வேண்டும். அப்பொழுது விதவிதமான பாகங்கள் அநேக வகைப்பட்டிருக்கின்றன. அவைகள் வேளை செய்துக் கொண்டிருக்கின்றன. (ரோமர் 14 : 4-5)

பவும் சிறையில் இருக்கும்பொழுது, அவர் எழுதி கொள்ளது. ஆழமான ஆவிக்கூரிய பணிகளை அவர் சொன்னார். அவைகள் வரம் எழுதினார். அதினால் நீங்கள் சமாதானத்தின் பந்தத்தின் மூலம் நீங்கள் அளைக்கப்பட்ட அழைப்புக்குப் பத்திரவான்களாய் நடந்து மிகுந்த மனதாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்குக்கு ஜாக்கிரதையாயிருங்கள் உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு, ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும் ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும், பிதாவும் உண்டு, அவர் எல்லார் மேலும் எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர். (எபேசியர் 4:11-6) என்று பவுல் சிறையிலே இருக்கு பொழுது ஆவிக்கூரிய வேலைகள் பற்றி அந்தரங்கத்திலே உள்ளவைகள்ச் சொன்னார்.

ஏற்றனார் என்பதினாலே அவர் அதற்கு முன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று விளக்குகிறதல்லவா? இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலா உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார். மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் ஏற்படுத்தினார். நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற் கேதுவான தந்திரமுள்ள மோதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிப்பட்டு அலைகிறவர் களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படி படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுதுவும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க்கூட்டி இணைக்கப்பட்டு ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியை செய்கிறப்படியே அது அன்பினாலே தனக்கு பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவான சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது. ஏனென்றால் சாதாரணமாக குற்ற காரியங்கள் தென்படாது ஆனாலும் சிலரில் பார்க்கமுடியும்.

நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளபடியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனங்கொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப் பிரமாணத்துக் கேற்றதாகச் சொல்லக்கடவன். ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும் போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்தி சொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன். பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன். முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக் கடவன். இரக்கஞ் செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன். (ரோமர் 12 : 6-8) இதிலிருந்து ஆவிக்குரிய சரீரத்தின் காரியங்களை கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றது.

தீர்க்கதரிசனம், சொல்வதும், நம்முடைய விசுவாசத்தில் பாகத்தில் தீர்க்கதரிசனம் செல்லுங்கள்.

பணி அல்லது ஊழியர், நம்முடைய வேலைகளிலே அல்லது ஊழியம் - நம்முடைய ஊழியத்திலே இதைச் செய்யுங்கள்.

உபதேசம் பண்ணுகிறவன் போதிக்கட்டும்.

புத்தி சொல்லுகிறவன் புத்தி செல்லட்டும்.

பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கவேண்டும்.

வழி நடத்துகிறவன் ஞானமுள்ளவனாக செய்யப்பட்டும் மிகவும் சந்தோஷத்துடன் மிகவும் இரக்கமுள்ள காரியங்களை செய்யுங்கள். இப்படிப்பட்ட காரியங்களை செய்துக்கொண்டு தேவனை சந்தோஷப்படுத்தும் வாழ்க்கையிலே வாழவேண்டும். தேவனுக்கு முன்பாக நாம் எப்படி வாழவேண்டுமோ ரோமர் 12ம் அதிகாரத்தில் இப்படி சொல்லப்பட்டிருக்கின்றன.

அன்பில் தனித்தன்மை

தீய வழிகளை புறக்கணிப்பது, நல்லதை பிடித்துக்கொள்வது,

சகோதர அன்பில் ஒருவரையொருவர் அன்பாயிருப்பது

ஒருவரையொருவர் கனம் பண்ணுவது.

ஆவிக்கூரிய காரியங்களிலே வைராக்கியமாய் கர்த்தரின் ஊழியத்தில் இருப்பது.

எதிர்ப்பார்ப்பதிலே ஆனந்தம், உபத்திரவத்திலே சாந்தத்துடன் பிடிப்புடன் ஜெயம்.

பரித்தர்கள் கஷ்டங்களிலே உதவிச்செய்வதும், உபசரிப்பு கொடுப்பதும்.

உங்களை துன்பப்படுகிறவர்களிடம் நல்லவிதமாக பேசவேண்டும்; அவர்கள் சபிக்காமல் ஆசீர்வாதிக்க வேண்டும்.

சந்தோஷமுள்ளவர்களிடம் சந்தோஷமாகவும், அழுகிறவர்களிடத்தில் அழவும் செய்யவேண்டும்.

ஒருவரையொருவர் முருமுருப்பில்லாமல் அன்பிலே இணைந்து இருப்பது.

தீமைக்கு தீமை செய்யாமல், எல்லோருக்கு நல்லது எதுவே புத்தியோடும் யோசித்து செய்யுங்கள்.

முடிந்தவரை எல்லாரிடத்திலும் சமாதானமாய் இருக்க வேண்டும்.

சகோதரர்களே உங்களுக்கு நீங்களே பகைத் தீர்த்து செய்தகொள்ளமல் தேவனுடைய கூக்கிரத்திற்கு விட்டுவிடுங்கள்.

உன் விரோதிகளுக்கு நல்ல காரியங்களை செய்யுங்கள். அவைகளை மூலமாக அவர்கள் தலைமேலே (தீயை) நெருப்பை போடுவது போலவாகும் மற்றும் எபேசியர் 4 : 11. படியுங்கள் அவர் சரீரத்தை சபை வளர்ச்சியடைவதற்கு, சம்பூர்ணபடுவதற்கு தேவனுடைய குமாரனனிடத்தில் விசுவாசத்திலே ஐக்கியம் பெற்றவர்களாய். சம்பூர்ணமடையவதற்கு சிலரை இப்படி ஏற்படுத்தினார்.

அப்போஸ்தலர்களாக – தீர்க்கதரிசிகளாக

சுவிசேஷகர்களாகவும் – மூப்பர்களாகவும், – உபதேசகர்களாகவும்

அதினாலே கிறிஸ்துவின் சபையிலே நாம் மேல்லோரும் ஒரே வகையான காரியங்கள் பெற்று, இல்லை நாம் எல்லோரும் ஊழியஞ் செய்ய ஊழியக்காரர்களாய் இருக்கிறோம். நாம் செய்கின்றதை மனிதர் மேன்மைக்காக செய்யாமல், ஒருவரையொருவர் கனம் பண்ணிக்கொள்ள வேண்டும்.

## கேள்விகள் :

1. கிறிஸ்துவை தரித்திருக்கின்றவர்களை தேவன் கிறிஸ்து மூலமாக ஸ்தாபித்த சபையிலே சேர்த்தார்.

.................... ஆம் ........ இல்லை

2. கிறிஸ்துவின் சரீரம் அநேக வேலைகள் இருக்கிறதுபோல, தனித்தன்மையாக நாமும்கூட அநேக காரியங்களைச் செய்யவேண்டும்.

....................ஆம் ......இல்லை

3. அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷர்கள், மூப்பர்கள் அல்லது கண்காணிப்பு செய்கிறவர்கள்.

............ஒவ்வொரு கிறிஸ்துவனுக்கு பணிகளை அல்லது காரியங்களைக் கொடுப்பது.

............ கிறிஸ்துவர்கள் பரிபூர்ணமாக இருப்பதற்கு ஊழியத்திலே பங்குள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

......... மேலே சொன்னது போல.

4. சபை ஒற்றுமையிலே இருப்பதற்கு நாம் தேவனுடைய வசன ஞானத்தில் வளர்ந்து, சபையினுடைய வேளைகளைச் செய்ய வேண்டும்.

............ஆம் ............ இல்லை

5. கிறிஸ்துவர்கள் தேவனுடைய ஊழியக்காரர்கள், எஜமானன் என்ன செய்வதற்கு நினைக்கின்றாரோ அது நடக்காமல் நமக்கு பிடித்தவைகளை சிலவற்றை செய்யலாம்.

............ஆம் ............ இல்லை

# விசுவாசத்தில் நிலைத்து நிற்பது

பாடம் - 27

ஒரு மனிதன் சுவிசேஷம் கேட்ட பிறகு......... இந்த விஷயங்களை கேட்கவேண்டும்.

1. சுவிசேஷ நற்செய்தி (1 கொரி 15 : 1-4)

   1. சரீரத்திலே தேவனுடைய குமாரன் பூமியின்மேல் வந்தோர்
   2. நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டார்.
   3. அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிருடன் உயிர்த்தெழுந்தார்.
   4. அவரை அழிந்தவர்களுக்குத் தென்பட்டார்.

2. அந்த நற்செய்திக்கு கீழ்ப்படிதல் இப்படி இருக்க வேண்டும்.

   1. அவர் தேவனுடைய குமாரன் என்று நம்பவேண்டும்.
   2. பாவத்திலிருந்து மனந்திரும்புதல்
   3. தேவனுடைய மார்க்கதில் நடப்பது.
   4. பாவத்தில் மரித்து, அது ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணி

3. அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஒரு புது சிருஷ்டியாக கீழ்ப்படிந்து, தேவனுடைய பிள்ளைகளாக அழைக்கப்பட்டார்கள். சுதந்திரத்தை தேவன் ஏற்படுத்தினார். இருந்தாலும் பிசாசானவன் ஒவ்வொரு விஷயத்தில் நம் மேல் தன் செயல்களை செய்து நம்மை முன்னே இருந்த பாவ வாழ்க்கைக்குள் மாற்றுகிறார். பேதுரு இப்படிச் சொன்னார். அவர்கள் கர்த்தரும் இரட்ச கருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தரின் அசுத்தங்களுக்கு த.தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெபிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபடி தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையும் விட்டு விடுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களும் நலமாயிருக்கும். (2 பேதுரு 2 : 20-21)

அப்போஸ்தலனாகிய யோவான் சொல்கிறார் ஒருவன் ஒளியிலே இருக்கிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைக்கிறவன் இதுவரைக்கும் இருளிலே இருக்கிறான். (1 யோ. 2:9) உலகத்திலும் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம் தேவனுடைய சிந்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் (1 யோவான் 2:15-17) தன் சகோதனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொல்பாதகளாயிருக்கிறான் (1 யோ 3:15) பயப்படுகிறவர்களும் சுவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாரதனைக்காரரும், பெய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினையும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார். (வெளி 21 : 8)

நாய்களும் சூனியக்காரரும், விபசாரக்காரரும், கொலைக்காரரும் விக்கிரகாராதனைக்காரரும், பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள் (வெளி. 22 : 15)

ஒருவேளை கிறிஸ்துவன் மறுபடியும் தன் பழைய வாழ்க்கைக்கும் திரும்பினால் அவர்கள் எவ்விதத்திலும் நல்லவர்கள் அல்ல, கெட்டவர்களாய் இருப்பார்கள், தேவனிடம் இருந்து திரும்பி பின்னே சென்ற தாமே; தீமைக்கு தாசனாய் இருந்து, அப்படிப்பட்டவைகளுக்கு சுதந்திரவாளியாக இருந்து, ஒருவன் எதினால் ஜெயிக்க படுகிறாமோ அதற்கு அவன் அடிமைதானே? அவர்கள் கர்த்தரும் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவினுடைய

அறிவிலே தெரினவனாக இருந்து இவ்வுலக இச்சைகளுக்கு தப்பித்துக் கொண்டபிறகு அதிலே விழுந்துவிட்டு அவைகள் மூலம் ஜெயிக்கப்பட்டபடியால் அவர்களுடைய பின் நிலைமை முன்னே இருந்த நிலைமைவிட தீமையாய் இருக்கும், அவர்கள் நீதியின் வழிகள் நன்றாய் அறிந்து தமக்கு ெ காடுக்கப்பட்ட பரிசுத்தமான அறிவிலிருந்து போவதைப் பார்க்கிலும், அந்த அறிவை பெறாமலிருப்பதே அவனுக்கு நன்மை. நாய் தன் வாந்திக்கு மறுபடியும் திரும்புவதுபோல, கழுப்பப்பட்ட பிறகு பன்றி மறுபடியும் சேற்றிலே மறுபடியும் செல்வதுபோல நீதிமொழி சொன்னதுபோல, இருக்கும் (2. பேதுரு 2 : 19-22) அவனிடம் எந்தவிதத்திலும் பிரியப்படமாட்டார். எபிரெயருக்கு எழுதினவர் எழுதி குறிப்பிடுகிறார். அதினாலே உங்களுடைய தைரியத்தை விட்டு விடாதிருங்கள். அதற்கு மேன்மையானவைகளைப் பெறுவாய் பரிசுகளைப் நீங்கள் தேவனுடைய சித்தத்தை அறிந்தவர்களாய், வாக்குத்தானம் பெற்றிதின் நிமித்தம் நமக்கு பொருமை வேண்டியதாயிருக்கிறது. இனி காலம் மிகக் குறைவாக இருக்கின்றது, வருகின்றனர் தாமதப்படுத்தாமல் வருவார். எனக்கு முன் நீதிமானாய் இருக்கிறவன் விசுவாசனத்தினால் வாழ்வான் அவன் திரும்பிப்போனால் அவருக்குள் என்னுடைய ஆவிக்கு சந்தோஷம் இருக்காது. ஆனால் நாம் அழிவது. பின்வாங்கமுடியாது என்றாலும் ஆவியைக் காப்பாற்றிக் கொள்வோருக்கு விசுவாசத்தை பெற்றவர்களாய்யிருக்கிறோம். (எபி.10 : 35-39). நீதிமானின் வழியிலே போவதற்கும் அதில் பிரவேசிப்பதற்கும் மாத்திரம் போதாது. ஏனென்றால் ஒருவன் கிறிஸ்துவைவிட்டு தன்னுடைய பாவ வாழ்க்கைக்கு திரும்புவன். முதல் நூற்றாண்டிலே அங்கிபாரம் போடப்பட்ட ஏழு ஆகிய சபைகளுக்கு சொல்லப்பட்ட நற்செய்தி பாருங்கள். இவைகளில் சில சபைகளை பவுல் சென்றார்.

எபேசு : இருந்தாலும் நீ முதலில் உனக்கு இருந்த அன்பை விட்டார். என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால் நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும் பாதபட்சத்தில், என் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கி விடுவேன். (வெளி 2 : 4-5)

## சிமிர்னு :-

நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே, இதோ நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசனெவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான். பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள் ஆகிலும் நீ மரண பரியத்தம் உண்மையாமிரு அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத்தருவேன். (வெளி. 2:10)

பெர்கமு : உன் கிரியைகளையும், சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும், நீ என் நாமத்தைப் பற்றிக்கொண்டிருக்கிறதையும், சாத்தான் குடிகொண்டிருக்கிற இடத்திலே உங்களுக்குள்ளே எனக்கு உண்மையுள்ள சாட்சியான சந்திப்பா என்னைப் பற்றும் விசுவாசத்தை நீ மறுதலியாமலிருந்ததையும் அறிந்திருக்கிறேன். ஆகிலும், சில காரியங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும், வேசித்தன பண்ணுவதற்கும் ஏதுவான இடறல் இஸ்ரவேல் புத்திரர் முன்பாகப் போடும்படி பாலாகி என்பவனுக்குப் போதனை செய்த பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்திலுண்டு. நீ மனந்திரும்ப, எல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம் பண்ணுவேன். (வெளி. 2:13, 14, 16)

## தீயத்தீரா :

ஆகிலும், உன்பேரில் எனக்குக் குறை உண்டு. என்னவெனில் தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யோசபேல் என்றும் ஸ்திரீயானவள் என்னுடைய ஊழியக்காரர். வேசித்தனம்பண்ணவும்,

விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து அவர்களை வஞ்சிக்கும்படி நீ அவர்களுக்கு இடங்கொடுக்கிறாய். (வெளி. 2 : 20)

### சர்தை :

சர்தை சபையின் தூதனுக்கு நீர் எழுத வேண்டியது என்னவெனில், தேவனுடைய ஏழு ஆவிகளையும் ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் சொல்லுகிறதாவது. உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன். நீ உயிருள்ளவென்று பெயர் கொண்டிருந்ததும் செத்தவனாயிருக்கிறாய். நீ விழித்துக் கொண்டு, சாசிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து, உன் கிரியைகளை தேவனுக்குமுன் நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை. (வெளி. 3 : 1, 2)

### பில்தெல்பியா

என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக் கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்க ரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனை காலத்திற்குத் தப்பும்படி நானும் என்னை காப்பேன். (வெளி. 3:10)

### லவோதிக்கேயா :

உன் கிரியைகள் அறிந்திருக்கிறேன். நீ குளிருமல்ல அனலுமல்ல. நீ குளிராயாவது அலையாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப் போடுவேன். (வெளி. 3 : 15,16), வரிசையாக பவுல் இப்படி காண்பிக்கிறார் நான் நிலைத்திருக்கிறேன் என்று நினைக்கிறவன் விழுந்து போகாதபடிக்கு ஜாக்கிரதையாய் பார்த்துக் கொள்ளப்படவேண்டும். (1. கொரி 10 : 12)

### கேள்விகள் :

1. ஒரு கிறிஸ்துவன் நீதியின் வழியிலே வாழ்க்கையில் முன் செல்லாமல் கெட்டவனாக மாற முடியும் என்று பேதுரு சொல்கிறார்.

   ....................ஆம் ................ இல்லை

2. சரீரசம்பந்தமான காரியங்கள் மூலம் பின்னே திரும்பி சென்றால் தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்திரத்துக் கொள்ள மாட்டான் என்று கலாத்தியாவிலிருக்கிற கிறிஸ்துவர்களுக்கு எழுதினார்.

   ....................ஆம் ................ இல்லை

3. ஒரு கிறிஸ்தவன் இருளில் இருக்க முடியும் என்று யோவான் சொன்னார்.

   ....................ஆம் ................ இல்லை

4. யார் மேல் தேவனுடைய கோபம் வரும்?

   1. ........................... கீழ்ப்படியாதவர்கள் 2. ......................... சீர்கேடான வழியில் இருப்பவர்கள்
   ...................... சத்தியத்தை புறட்டுகிறவர்கள் ..................... மேலே சொன்னபடி எல்லாம்

5. உலகம், அதிலுள்ள ஆசைகள்யெல்லாம் ஒழிந்துபோகும் தேவனுடைய சித்தம் நித்தியம் நிலைத்திருக்கும்.

.............................. ஆம் ................ இல்லை

## புதிய ஏற்பாட்டின் தொழுகை

பாடம் - 28

உண்மையாய் தொழுதுக் கொள்கிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும், பிதாவை தொழுதுக் கொள்ளும் காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது. தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். (யோவான் : 4 : 23).

பணத்தையும் மற்றும் வஸ்துக்களையும் சிலர் ஆராதிப்பார்கள். இது உண்மையான தொழுகையா? இல்லை. ஆராதனை என்பது தொழுகை, கீழ்ப்படிதல், அன்புனுடைய சுபாவத்தில் மற்றும் துதி, மரியாதையினுடைய கிரியைகள் பெற்று தொழுகையுடைய வழிமுறை. வழிபாடு மதம் சார்ந்ததல்ல.

- சிலர் மிருகங்களை பலியிட்டு தொழுகை செய்வார்கள்
- இஸ்ரவேலர்கள் மச்சம், குறை இல்லா பலிகளையும் மற்றும் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துவார்கள்.
- தேவன் இவ்வுலகத்தை அன்புக்கூர்ந்து தன் குமாரனை பலியாக கொடுத்தார்.
- கிறிஸ்து தன் சரீரத்தை பரிபூர்ண பலியாக அற்பித்தார்.
- அவருக்குள் நம்பிக்கை, கீழ்ப்படிதல் வழியாக பாவ மன்னிப்பு கிடைத்தது.
- கிறிஸ்தவர்கள், அவர்களுடைய சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும்.

## யாரை தொழுதுக் கொள்ளவேண்டும் :

கிறிஸ்துவுக்குள் அவர்களுக்கு பவுல் இப்படிச் சொன்னாள். அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவ ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை (ரோமர் 12 : 1). ஜீவனுள்ள பலியாக ஒப்புக்கொடுப்பதிலே பொருள்களுடைய ஆவிக்கூரிய தொழுகையில் மிகவும் முக்கியமானதாகும். ஒரு மனிதனுடைய அந்தரங்கத்திலே அன்பு, சமாதானம் மற்றும் துதி வழிபாடுகள் இருந்தாள். அப்பொழுது இது ஏதோ ஒரு மார்க்கமாக, பேச்சுகள் யோசனைகள் மற்றும் கிரியைகளானே தெரியப்படுத்துவதற்காக ஒரு கோரிக்கை இருக்கும் இப்படி சொல்வதினாலே தேவனுடைய சித்தத்தின், மேல் நடைமுறையிலே இருக்கும்பொழுது, பலவிதமான அதென்னவென்றால் வாய்ப்பின்படி நல்லது பண்ணுவது, பாடல்கள்படுவது, நன்றியுடன் ஜெபம் செய்வது. பிறருக்கு உதவி செய்வதின் வழியாக கொடுப்பதிலே இருக்கின்ற சந்தோஷம், நம்மிடத்தில் தேவனுடைய சித்தத்தை நாம் தெரிந்துக் கொள்வதற்கு தேவனுடைய வசனம் படிப்பதிலேயும் மற்றும் அவருடைய சந்தோஷப்பட வைப்பது

இவைகள் நடக்கும். நமக்காக இயேசுகூடைய சம்பூர்ண பலியை ஞாபகப்படுத்திக் கொள்வதும் மற்றும் தேவனுடைய சாயல் நம்மிடத்தில் தென்படியாகவும் தினம் தினம் நடந்துகொள்வது.

தேவன் ஆவியாய் இருப்பதனாலே அவரை தொழுதுக் கொள்கிறவர்கள் ஆவியோடும் (சரீரபிரகாரம் அல்ல) மற்றும் சத்தியத்தோடும் (சடங்கல்ல) தொழுகை செய்யவேண்டும். (யோவான் 4:24)ல் உண்மைத்தனமாக சொல்லப்படுகின்றது.

தேவன் ஒரு ஆவியானவர் – இந்த சொற்கள் சாதாரணமாக நம்முடைய காதுகளில் எப்பொழுதும் கேட்க முடியாத ஆழமான பெரிய வார்த்தைகள். அவர்களுக்கு நடந்த மகா பெரிதான காரியங்களிலே மகிமைகள் அவர்களுக்கு உண்மையாக தென்படும். மற்றும் தவறாக புரிந்து கொள்பவர்களாலே ஒரு அர்த்தங்கள் சரிசெய்ய வார்த்தை சொற்கள்.

1. தேவனுடைய அசாதாரணமான சம்பவங்கள். (அப்போஸ்தலர் 7 : 48)

2. தேவன், விக்கிரஹம் போன்ற பொருள் அல்ல.

3. தேவபாரகரும் மோசிக்கிறதைப்போல தேவன் ஒரு பரிகார பொருள் அல்ல. தேவன் ஒரு ஜீவன்.

4. மனிதனுக்கு தேவைப்படுகிற தேவனுடைய ஆமென், பலிகள் போல அவைகளைவிட கனமுள்ளவன் தேவன். (அப். 17 : 25)

## எப்பொழுது தொழுகை செய்யவேண்டும் :

ஒரு ஜீவனுள்ள பிலியாக வாழ்வதின்மூலம் ஒவ்வொரும் விஷயங்களில் தேவனுக்கு நன்றியையும், மகிமையையும், ஸ்தோத்திரங்களை செலுத்தவேண்டும்.

1. தேவனுடைய பிள்ளைகளுக்கு மற்றும் மற்றவர்களுக்கும் உதவிகள் செய்வது.

2. பிறருக்காக அற்பிக்கிற வாழ்க்கையின் வாழ்வதிலே தேற்றுதல்.

3. கிறிஸ்துவுக்குள் மன்னிப்பு, இரட்சிப்பை உபதேசிப்பது.

4. நம்முடைய மீட்டரைப் பற்றிய சுவிசேஷத்தை போதிக்கவேண்டும்.

அதினாலே நாம் தேவனுடைய ஊழியம் செய்வது, போதிப்பது, பாடுவது எச்சரிப்பது மற்றும் சமூகமாக கூடுவது எப்பொழுது ஆகிலும், எங்கேயாவது தேவனை மகிமைப்படுத்துவதும் மற்றும் தேவனை ஆராதனை செய்ய வேண்டும். பரிசுத்த வசனங்களிலே சொல்லப்பட்டதுபோல, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை தோறும், சபை தொழுகைச் செய்யவேண்டும்.

மற்றும் ஸ்திரியுடன் இயேசு இப்படிச் சொன்னார். ஸ்திரியே நான் சொல்கிறதை நம்பு நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங்காலம் வருகிறது. (யோவான் 4 : 21). ஒரு பிரதேகமான பவனத்திற்கு செல்வது மற்றும் ஒரு தனி இடத்திற்குச் செல்வது தேவன் விரும்பவில்லை. அல்லாமலும் சரீரசம்பந்தமான விஷயங்களை விட மாறாக தேவன் நபர் இருந்து கேட்கிறார். நாம் ஒரு சமூகமாகவும் அல்லது ஒரு சபையாகவும் கூடுவதின்மூலம் அந்தரங்கத்திலுள்ள பாவனைகள்

தேற்றப்பட்டு சபையாக தேவனை தொழுதுக் கொள்ளாம்.

## எப்படி தொழுதுக் கொள்ளவேண்டும்

யார், என்ன, எப்பொழுது என்கின்ற விஷயங்களை புரிந்துக் கொள்வதின் மூலம் எப்படி தொழுகைச் செய்யவேண்டுமோ தெரிந்துக் கொள்வதற்கு உதவியாயிருக்கும். கிறிஸ்துவுக்குள் நாமும் கூட விசுவாசம் வைத்து தேவனை கனம் பண்ணுவதும், மகிமைப்படுத்துவதும், துதிப்பதும் மற்றும் தொழுகைச் செய்வதற்கும் நம்முடைய வாழ்க்கையைச் ஜீவனுள்ள பலியாகவும், கொடுப்பதின்மூலம் வசனத்தை சரியாக கடைப்பிடிப்பதாகும். ஒருவன் தன்னுள் இருக்கின்ற ஆவிக்குரிய விஷயங்களை, அந்தரங்கத்திலே யோசனையின்மூலம் ஆவி தேவனைத் தொழுகைச் செய்ய வேண்டும். அல்லாமல் தினம் தினம் வேலை செய்வதுப் போல செய்யக்கூடாது.

அதனாலே, ஒருவனுடைய எண்ணங்கள், மற்றும் யோசனைகள் தேவனுடைய ஞானத்தின்மேல் சார்ந்து இருந்தால், ஆவியை தேவனிடம் ஒற்றுமையான பந்தம் அல்லது அந்நோன்னியமான ஒற்றுமைப் பெற்று, இருக்கவேண்டும். அவருடைய அந்தரங்கத்திலே தேவனை துதிப்பதற்கு தயாராக ஒரு ஜீவனுள்ளவனாக ஒப்புக் கொடுக்க தேவனுக்கு ஆவியோடும் மற்றும் சத்தியத்தோடும் அவரை தொழுதுக் கொள்ளமுடியும்.

### வீணான தொழுகை

மனிதனுடைய அந்தரங்கத்திலிருந்து ஆவிக்கூரிய, பாடுவதும், ஜெபங்கள், தொழுகைனுடைய அற்தங்கள், துதிப்பதின்படி அவைகளின் வழியாக தேவனை மகிமைப்படுத்துவதும், நற்க்கிரியைகள் மூலம் மனிதன் தேவன்மூலம் ஏற்றுக்கொள்ளப்படும். இருந்தாலும் ஒருவனுடைய அந்தரங்கத்திலிருந்து முரண்பாடான காரியங்களை செய்யும் தொழுகை, ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஏனென்றால்,

1. தனித்தன்மை ஆசைகள் நிறவேற்றுவதற்கு செய்யும் ஜெபங்கள்

2. தனித்தன்மை அடையாளங்களுக்காக கொடுக்கும் காணிக்கைகள்

3. தேவனுடைய யோசனை இல்லாம் வாயினால் மட்டும் பாடுவதும்.

4. மனிதர்களுடைய மேன்மைக்காக உபதேசங்கள்

5. தேவனுக்கு நன்றிகள் தெரியப்படுத்தாமல், பாவ மன்னிப்பு, மீட்பு மற்றும், சமாதானத்தைப் பற்றி கிறிஸ்து, சம்பூர்ண நினைவுக்கூறாமல் கர்த்தருடைய பத்தியில் பலியாகத்தையைப் போடுவதும்.

வீணான அல்லது சொந்த சந்தோஷத்திற்காக நல்ல வேலை செய்வதும். தேவனுடைய இராஜ்ஜியம் உண்மையாக உன்னில் இருந்தால், அப்பொழுது உன்னுடைய எண்ணங்களிலே, நல்லத்தனம், விசுவாசம், சந்தம், இச்சையடக்கம், போன்றவைகள் உன் கிரியைகளிலே வெளிப்படுத்தப்படும்.

## கேள்விகள் :

1. யாரை தொழுதுக் கொள்ளவேண்டும்?

1. ................. பிதாவாகிய தேவன் 2. ................ குருக்கள்
3. ............... தீர்க்கதரிசிகள் 4. .................இயேசு

2. எப்பொழுது நாம் தொழுதுக்கொள்ளவேண்டும்?

1. ............... ஒவ்வொரு ஞாயிறுதோறும்.
2. ................. வாரத்திற்கு மூன்றுமுறை

3. தேவனைத் தொழுதுக்கொள்வதற்கு ஒருவருடைய ஒரு பவனம் அல்லது ஆலயத்திற்குச் செல்ல வேண்டம்.

1.................ஆம் 2. ............இல்லை

4. தொழுகை என்பது

1. ............ ஒரு விக்கிரகம் அல்லது ஒரு பலிபீடத்திற்கு பணிந்து குனிந்து, செய்வது.
2. ........... ஆசாரியன் மூலம் செய்யப்படும் ஒரு வழிப்பாடு
3. .......... அந்தரங்கத்திலே எண்ணங்கள் வழியாக தேவனை கனம் பண்ணுவது.

5. தொழுகைக் காரியங்களை வீனாகச் செய்யகூடாது. ஏனென்றால் எல்லாவிதமான தொழுகை தேவன் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

1. ..........ஆம் 2. ........... இல்லை

## நித்திய ஜீவன் அல்லது நித்திய நரகத்தை தேர்ந்தெடுப்பது.

பாடம் - 29

நீ உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல், அவனை ஒப்புக் கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால், நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசிர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் பெருகவே பெருகப் பண்ணுவேன் என்று உன் சந்ததியார் தங்கள் சத்ருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் என்றும் நீ என் சொல்லுக்குக் கீழ்ப்பந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசிர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார் (ஆதி. 22 : 16-18) அநேக வருஷங்கள் சென்றபிறகு ஆபிரகாம் சந்ததியாகிய ஜனங்களிலிருந்து ஒருவரைப்பற்றி தேவன் இப்படிச் சொன்னார்.

பின்பு அவர் அவனைத் தள்ளி, தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தி, ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன். எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான் என்று அவனைக் குறித்துச் சாட்சியுங் கொடுத்தார். அவனுடைய சந்ததியிலே தேவன் தமது வாக்குத்தத்தத்தின்படியே இஸ்ரவேலுக்கு இரட்சகராக இயேசுவை எழும்பப்பண்ணினார். (அப். 13 : 22-23)

மனிதர்களை இரட்சிப்பதற்கும், மற்றும் அவர்களை மறுபடியும் தேவனோடகூட ஒப்புறவாக்குவதற்கு ஆபிரகாம் சந்ததியிலிருந்து இரட்சகர் வருவார் என்று தீர்க்க தரிசனம் சொன்னார்கள்.

நாம் புத்திர சுவிகாரத்தையடையும்படி நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்

கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப் பிரமானத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார். மேலும், நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். (கலாத்தியர் 4 : 4-6).

தீர்க்கதரிசனங்கள் எல்லாம் இயேசுவின்மூலம் நிறைவேறிவிட்டது நியாயப் பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள். அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்து போனாலும், நியாயப் பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத்தேயு : 5 : 17-18)

தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு அவர் வந்து, தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வு நாளில் ஜெப ஆலயத்திலே பிரவேசித்து, வாசித்து எழுந்து நின்றார். அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம் அவரிடத்தில் கொடுக்கப்பட்டது. அவர் புஸ்தகத்தை விரித்தபோது, கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார். தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார், இதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்கும் பார்வையையும், பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார் என்று எழுதியிருக்கிற இடத்தை அவர்கண்டு, வாசித்து, புஸ்தகத்தைச் சுருட்டி பணிவிடைக்காரனிடத்தில் கொடுத்து, உட்கார்ந்தார் ஜெப ஆலயத்திலுள்ள எல்லாருடைய கண்களும் அவர்மேல் நோக்கமாயிருந்தது. (லூக்காபு : 16-21)

மனுப்புத்திரருக்காக பாவ பரிபூர்ணபலியாக கொடுப்பதற்கு, மாம்சத்திலே இருக்கின்ற தேவனுடைய குமாரனை (இம்மானுவேல்) என்று தன்னுடைய வாழ்க்கையில் பாவமில்லாமல் தன் சரீரத்தை ஒப்புக் கொடுத்தார். மனிதர்கள் எல்லோரும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து அவருக்கு கீழ்ப்படிந்து பாவ மன்னிப்பு பெறுவதற்கு இந்த பலி மூலமாக நமக்கு வாய்ப்பு பெற்றுத் தருகின்றது. அதினாலே எல்லாரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அவர் மூலமாய் பாவ மன்னிப்பாகிய தேவனுடைய ஈவு பெறுவதற்கு தேவன் விரும்புகிறான். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்ததைக் குறித்தத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லோரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பெறுமையுள்ளவராயிருக்கிறார். (உபேதுக 3 : 9)

## பாவ மன்னிப்பைப்பற்றி :

கிறிஸ்து சுவிசேஷ நற்செய்தி கேட்டவர்கள் அவர்மேல் விசுவாசம்வைத்து, ஏற்றுக் கொண்டு, பாவத்தினால் மரிப்பதற்கு, ஞானஸ்நானம் பெற்று, கிறிஸ்து மரணத்திலே அடக்கம் பண்ணப்பட்டு மற்றும் ஒரு புரு சுருஷ்டியாக தேவன்மூலமாக எழுப்பப்பட்டு, இரட்சிக்கப்பட்டவர்களிடத்தில் அதாவது கிறிஸ்துவின் சரீரத்தில் (சபையில்) சேர்க்கப்படுவார்கள். பரிசுத்த ஆவினுடைய பெறுவார்கள். அப்பொழுது அவர்கள் ஆவியின் களிகள் பெற்றுக் கொண்டார்கள். இருந்தாலும் ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை தயவு நற்குணம், விசுவாசம் சாந்தம், இச்சையடக்கம் (கலாத்தியர் 5 : 22)

நித்தியத்திலே எங்கே அவர்கள் இருக்கப்போகிறார்கள் என்பதை தினதின அவர்களுடைய வாழ்க்கையிலே எடுக்கின்ற தீர்மானங்கள் மற்றும் பின்பற்றுகிறதை பற்றி இருக்கின்றன. அன்பு, தயவு, உண்மை, நம்பிக்கை, சாந்தம், கருணை, பெற்ற தேவனோட கூட இருப்பதா, அல்லது பொய்க்கு தலைவன், மொசம், கொலை, துஸ்டன் மற்றும் அநீதியுடைய தலைவனாகிய பிசாசாவைனோட கூட இருப்பதா முடிவு எடுக்கப்படும். பூலோகம் தேவனுடைய வாசத்தலம், அல்லது வசிக்கும் இடம். எல்லா நீதி, பெற்று அற்புதமான மற்றும் மனிதனுடைய பரம்மாக தீர்மானிக்கப்படுகின்றது.

## நித்திய ஜீவன் - பரலோகம்

எ. உடனே ஆவிக்குள்ளானேன் அப்பொழுது, இதோ, வானத்தில் ஒரு சிங்காசம் வைக்கப்பட்டிருந்தது, அந்தச் சிங்காசனத்தின்மேல் ஒருவர் வீற்றிருந்தார். வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார். அந்தச் சிங்காசத்தைச் சுற்றி ஒரு வானவில்லிருந்து, அது பார்வைக்கு மரகதம்போல் தோன்றிற்று. அந்தச் சிங்காசத்தைச் சூழ இரு பத்து நான்கு சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானிவில்லிருந்து, அது பார்வைக்கு மரகதம்போல் தோன்றிற்று. அந்தச் சிங்காசத்தைச் சூழ இரு பத்து நான்கு சிங்காசனங்களிருந்தன. இருபத்து நான்கு மூப்பர்கள் வெண்வஸ்திரந்தரிடத்து, தங்கள் சிரசுகளில் பொன் முடி, சூடி, அந்தச் சிங்காசனங்களின்மேல் உட்கார்ந்திருக்கக்கண்டேன். (வெளி. 4 : 2-4)

பி. அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார். இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமில்லை முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது. (வெளி 21: 4)

சி. மேலும் நமது தேவனுடைய ஊழியக்காரரே, அவருக்குப் பயப்படுகிற சிறியோரும், பெரியோருமானவர்களே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள் என்று ஒரு சத்தம் சிங்காசனத்திலிருந்து பிறந்தது. அப்பொழுது திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம் போலவும், பெருவெள்ள இரைச்சல் போலவும், பலத்த இடி முழுக்கம்போலவும், ஒரு சத்தம் முன்பாகி, அலலேலுயா, சர்வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம்பண்ணுகிறார். (வெளி. 19 : 5-6)

டி. அதிலே தேவாலயத்தை நான் காணவில்லை, சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியான வருமே. அதற்கு ஆலமரம். நகரத்திற்கு வெளிச்சங் கொடுக்கச் சூரியனும் சந்திரனும். அதற்கு வேண்டுவதில்லை, தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்து, ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு, இருட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதின் வெளிச்சத்திலே நடப்பார்கள். பூமியின் ராஜாகிகள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள். அங்கே இராக்காலம் இல்லாதபடியால், அதின் வாசல்கள் பகலில் அடைக்கப்படுவதே இல்லை. (வெளி 21: 22-25)

## நித்திய மரணம் – நரகம்

நரகம் சாத்தானுடைய இருப்பிடம். அதனுடைய தூதர்கள் மற்றும் சேரப்படுகிறவர்கள்.

எ. அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார். (மத் 25 : 32-33)

பி. மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார். அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற

சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து. (மத் 14 : 41)

சி. பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. (மத் 7 : 21)

டி. அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்திரப் பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள் வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாரதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரமும், ஆண்புணர்ச்சிக்காரரும்.

திருடரும், பொருளாசைக்காரரும், வெளியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. (1கொரி 6 : 9-10)

மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன. அவையாவன : விபசாரம், வேசித்தனம், அசுத்தம் காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறுமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே. இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன். (இலா 5 : 19-21).

பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைகாரரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்பர். (வெளி. 21 : 8)

**கேள்விகள் :**

1. தேவன் மனிதர்களுக்காக ஒரு இரட்சகரை அனுப்பினாரா?

   ....................ஆம் .......... இல்லை

2. இரட்சகர் என்றால் யார்?

   ............... பிதா .............குமாரனாகிய இயேசு. ............. மனிதர்கள் தயார் பண்ணியது
   .................... எதுவும் இல்லை

3. மரணத்தின் பிறகு என்ன பெறுவார்கள்?

   ................. நித்தியஜீவன் அல்லது நித்திய மரணம்
   ................ எது பிடித்திருக்கோ அது

4. கிறிஸ்துவுக்குள் இருக்கிற எல்லாரும் விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டும்?

   .............ஆம் ............. இல்லை

5. கடைசி நாட்களிலே பூமியின்மேல் யார் இரட்சிக்கப்படுவார்கள்.

   .................. எல்லோரும்

.........கிறிஸ்துவின் விசுவாசிகள்

............ விக்கிரக ஆராதனை செய்கிறவர்கள்

## நியாயத்தீர்ப்பு மற்றும் நித்தியமான

பாடம் – 30

ஏற்றபடி நம்முடைய மனதிற்கு நித்தியமான விஷயத்தில் புரிந்து கொள்வது மிகவும் கடினம்தான். இருந்தாலும் தேவன் பூமி, ஆகாயம், சுருஷ்டிப்பதற்கு முன்னே இருந்தார் மற்றும் பூமி ஆகாயங்கள், சென்றபிறகு கூட இருப்பார். கிறிஸ்து மறுபடியும் வரும்போது, ஒவ்வொரு அவர்களுடைய சுருஷ்டிகரை அல்லது சர்வ வல்லமையுள்ள தேவன் முன்பு, பூமியின்மேல் நடந்த அவருடைய காரியங்களை கணக்கு ஒப்புவிக்கவேண்டும். அந்த நாட்கள் நமக்கு ஒரு பெரிய நியாயாதிபதி இயேசுவானவர் நம் நிமித்தமாக இருக்கிறார் என்பது எவ்வளவு பெரிதான காரியம் அதினால் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து அடக்கம் பண்ணப்பட்டு எப்படி எழுப்பப்பட்டாரோ அப்படியே நாமும் கூட புதிதான ஜீவன் பெற்றவர்களாய் நடக்கும்படியாக, நாம் ஞானஸ்நானத்தின்மூலம் அவருடைய மரணத்தில் சாயலாக அவருடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். (ரோமர் 6 : 41) அதினாலே தமக்கு கீழ்ப்படிந்த விசுவாசகளுக்காக அவர் பரிந்து பேசுவராக இருக்கிறார். அப்பொழுது தேவன் அவருடைய சந்நிதியில் நம்மை அழைப்பார். அப்பொழுது நாம் நித்தியம் சந்தோஷத்துடன் அவரை கீர்த்தனைப் பண்ணி நன்றிகளை சொல்லி இருப்போம். பயமில்லாமல், கவளையில்லாமல், துக்கமில்லாம், அழுகையில்லாம், இருளில்லாத இடத்தில் நாம் இருக்கும்படியாக இயேசு நமக்காக மரித்தார். அங்கே அன்பு, சந்தோஷம், சமாதானம், சத்தியம் மற்றும் உண்மை எல்லாம் நித்தியமும் இருக்கும்.

இந்நோரு விதமான சமூக மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அவர்கள் நிமித்தம் நியாயவாதி இல்லை. அவர்களுடைய நிலைமை எப்படி இருக்குமோ? அவர்கள் இவ்வுலகில் அவர்களுடைய ஆசைகளை தீர்த்துக்கொண்டு, கீழ்ப்படியாமல் எதிர்த்து நின்றார்கள். மற்றும் அவர்கள் சர்வ வல்லமையுள்ள தேவனை நினைக்கவுமில்லை.

ஆகையால், மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி, போகச் சொல்ல உனக்கு இடமில்லை, நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்கள் குறித்துச் செல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய். இப்படிப்பட்டவைகள் செய்கிறவர்களுக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பு சத்தியத்தின்படியே இருக்கிறதென்று அறிந்திருக்கிறோம். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களை குற்றவாளிகளென்று தீர்த்தும், அவைகளையே செய்கிறவளே, நீ தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக் கொள்ளலாமென்று நினைக்கிறாயோ? அல்லது தேவ தயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு பொறுமை, நீடிய சாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டை பண்ணுகிறாயோ? உன் மனக்கடினத்திற்கும் குணப்படாத நீதியுள்ள தீர்ப்பு, வெளிப்படும். கோபக்கினை நாளிலே உனக்காகக் கோபக்கனைக் குவித்துக் கொள்ளுகிறாலே. தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்கு பலனளிப்பார். சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும், அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவன் அளிப்பார். சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்கு கீழ்ப்படியாமல், அந்நியாயத்திற்குக் கீழ்ப்படித்திருக்கிறவர் களுக்கோ உக்கிர கோபாக்கினை வரும். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் பொல்லாதுரு செய்கிற எந்த மறுவு ஆத்துமாவுக்கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும் முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும்

எவன் நன்மை செய்கிறாரே அவனுக்கு மகிமையும் கனமும் சமாதானமும் உண்டாகும். (ரோமர் 2 : 1-10)

அப்படியிருந்தாலும் உலகமுண்டாவது முதற்கொண்டு அவர் அநேகத்தரம் பாடுபடவேண்டியதாயிருக்குமே. அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்கள் நீக்கும் பொருட்டாக இருந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார். அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு, நியாயத் தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே, கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களை சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார். (எபிரேயர் 9 : 26-28)

கடைசி நாட்களில் என்ன நடக்கப் போகின்றது. கிறிஸ்துவுடைய இரண்டாம் வருகையைப் பற்றி வேத வசனங்கள் நமக்கு சொல்கிற விஷயங்கள் பற்றி ஆறாய்ந்தும் பார்ப்போம்.

1. கர்த்தர் வெளிப்படுவார் : ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் (2. தெசலோ 4 : 16). அந்த நாள் எப்போழுது வருமோ, அப்பொழுது பூமியின்மேல் இருக்கின்ற மனிதர்கள் எல்லாம். அந்த சத்தத்தைக் கேட்பார்க்கள் மற்றும் கண் இமைக்கும் நேரத்தில் நாம் எல்லோரும் கொண்டு செல்லப்படுவோம்.

2. மரித்தவர்கள் எழுப்பப்படுவார்கள் :- எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள், நாமும் மறு ரூபமாக்கப்படுவோம். (1 கொரி 15:52) இயேசு மறுபடியும் வந்து பிறகு அப்போது வரை மரித்தவர்கள் சமாதியிலிருந்து எழுந்திருப்பார்கள்.

3. உயிரோடிருப்பவர்கள் மாற்றப்படுவார்கள் : நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை, ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்டபோது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப் பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். (1. கொரி 15 : 51). மூன்று விஷயங்கள் வரிசையாக நடக்கும். எல்லாரும் பார்க்கும் பொழுது நடக்கும்.

1. ஒரு எக்காளம் தொனிக்கும்

2. பிரதான தூதனுடைய சத்தம்

3. அப்போது வரை மரித்தவர்கள் எழுந்திருப்பார்கள் மற்றும் பிழைத்திருக்கிறவர்கள் மாற்றம் பெறுவார்கள்.

## பிரிக்கின்ற காரியம் :

அப்பொழுது சலக ஜனங்களும் அவருக்கு முன்பாக சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பாரனவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்கள் அவர் பிரிதிது. (மத். 25 : 32)

5. நீதிமான்களுக்கு இடம் கொடுக்கப்படும் : அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது

முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்திரித்துக் கொள்ளுங்கள். (மத் 25 : 34)

6. சபிக்கப்பட்டவர்களை பற்றிய வார்த்தைகள் : அப்பொழுது, இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர், சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காவும், ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள். (மத் 25 : 4) வெளிப்பட்டப்பிறகு யோவான் இப்படிச் சொல்கிறான். மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன். (வெளி. 20 : 12)

7. பூமி அழிவது : அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம். பூதங்கள் வெந்து உருகிபோம். பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். (2. பேதுரு 3 : 10)

வனத்கூரியவைகள், பறவைகள், மேகங்கள், வானம், சூரியன், நட்சத்திரங்கள் முதலானவைகள்.

பூமியின் மேல் காலம் முடிக்கப்படும். இப்பொழுது இரட்சிப்பு என்ற தேவனுடைய பரிசுகளை பெறுவதற்கு காலம் கடந்து விட்டது, அதினாலே தேவனை நம்புங்கள். இன்றே இரட்சிப்பு நாள்.

கேள்விகள் : தீர்ப்பு நாளுக்காக கிறிஸ்துவர்களுக்கு ஒரு பரிந்துக்காரர் அல்லது நியாயதிபதி கிறிஸ்து இருக்கின்றார். மற்றும் ஞானஸ்நானம் மூலம் கிறிஸ்துவின் இரத்தத்திலே தம்முடைய பாவங்களை சுத்தப்படுத்தி கொண்டார்கள் என்றுச் சொல்லப்படும்.

................. ஆம் ........ இல்லை

2. கிறிஸ்துவுனுடைய அழைப்பை ஏற்றுக் கொள்ளாதவர்கள் எல்லோரையும், சாத்தான் அவனுடைய தூதர்களையும் சேர்த்துக் கொள்வதற்கு அழைப்பார்.

..............ஆம் ............ இல்லை

3. தேவன் தன்னுடைய அருபத்திலே மனிதர்களை உண்டுப்பண்ணி, தேவன் செய்த எல்லாவற்றிலும் நித்தியவல்லமை, தேவதத்துவத்தையும் நன்றாக தெரியப்படுத்தி அவர்களுக்கு வாய்ப்பில்லாமல் இருக்கும்படிச் செய்தார்.

..............ஆம் ............ இல்லை

4. கிறிஸ்து வரும்போது பூமிக்கு தன்னுடைய தூதர்களை அனுப்ப பக்திற்றவர்களை தன்னுடைய இராஜ்ஜியத்திலிருந்து வேறுபடுத்தி, தரிக்கிற அக்னியிலே போடுவார்.

..............ஆம் ............ இல்லை

5. தகிக்கிற அக்னி கடல் அல்லது நித்திய நரகம். சாத்தானுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் ஏற்படுத்தி வைத்தார்.

..............ஆம் ............ இல்லை

## சமாதான நற்செய்தி

அஞ்சல் வழி வேதாகப் பாடம்

சமாதான நற்செய்தி என வேதப்பாடப்பகுதிக்கு உங்களை அழைக்கின்றோம். தேவனுடைய சாயலா, தேவனுடைய ரூபமாகவும் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் மீறுகிறதினால் அந்த தேவனுடைய சுபாவத்தை விட்டுவிட்டான், யுகத்தில் எல்லாவற்றிலேயும் அந்த கட்டளைகளை மீறுதல் செய்வதினாலே தொடர்ந்துக் கொண்டிருக்கின்றான். இருந்தாலும் தேவன் மனிதர்கள் எல்லோரையும் மறுபடியும் தன் சாயலில் வரவேண்டும் என்று விரும்புகிறார். தன்னுடன் சமாதானப்படும்படிக்கு தன் நற்செய்தி வேதாகமத்திலே வெளிப்படுத்தினார். அந்த சமாதான நற்செய்தி பற்றியே இந்தப்பாடங்கள். இந்தப் பாடங்கள் வழியே மொத்தம் மூன்று பாகங்களாகவும் 30 பாடங்கள் இருக்கின்றன.

பாகம் – 1 : பாடங்கள் 1 – 10 : கிறிஸ்து பூலோகத்திற்கு வருவதற்கு முன் காலம்

பாகம் – 2 : பாடங்கள் 11– 20 : கிறிஸ்து சரீரத்தில் வாழ்ந்து இருந்தக் காலம்.

பாகம் – 3 : பாடங்கள் 21 – 30 : கிறிஸ்து பரலோகத்திற்கு சென்றபிறகு நடந்த காலம்.

ஒரு பாகத்தில் பாடங்களை படித்து, கேள்விகள் எல்லாவற்றையும், பதில்கள் எழுதி அனுப்ப வேண்டும். வேத ஆசிரியர் அதை திருத்தி உங்களுக்கு வந்த கிரேட்–டையும் பிறகு பாகமான பாடங்களையும் அனுப்பி வைக்கப்படும். மூன்று பாகங்கள் முடித்தபிறகு உங்களுக்கு வந்த கிரேட்–டின் படி ஒரு சான்றிதழை உங்களுக்கு அனுப்பப்படும்.

முடித்த பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி :

சகோ விநய்குமார் (டைரக்டர்)
அஞ்சல் வழி வேதப்பாடம்
சர்ச் வீதி, சந்திரபாபு காலனி,
நாயுடுப்பேட்டை - 524 126.

நெல்லூர் ஜில்லா, ஆந்திர பிரதேஷ், இந்தியா.

போன் நம்பர் : 98858 45588, 94944 73488

சமாதான நற்செய்தி
பதில்கள்

பெயர் ............................ (குறிப்பு - எண்) ரேப்ரேன்ஸ் நம்பர் ...........................

தொலைபேசி எண் : .........................................................................

முகவரி போன் நம்பர் : ..................................................... மதிப்பெண்கள் : ...........................

பாடம் - 21

............................